**எளிய ஸ்ரீ சக்கர வழிபாடு - தமிழில்**

*ஸ்ரீ சக்கர பூஜை தினசரி வழிபாடாகவும் அல்லது வெள்ளிக்கிழமை, பௌர்ணமி மற்றும் விசேஷ தினங்களில் செய்யப்படும் சிறப்பு வழிபாடாகவும் செய்யப்படலாம். ஸ்ரீ சக்கர உபாசனையில் விருப்பமும், ஈடுபாடும் உடையவர்கள் முறையான குரு தீட்சை பெற்று பிறகு நாற்பத்தியெட்டு நாட்கள் விரதத்துடன் வழிபட்டு ஆலய தரிசனம், வேள்வி தானம், அன்னதானம் போன்றவற்றுடன் நிறைவு செய்ய நற்பலன் கிடைக்கும். உள்ளத்தூய்மை, உடல்தூய்மையுடன் பின்வரும் எளிய வழிபாட்டை அனைவரும் செய்யலாம். ஸ்ரீ சக்கர பூஜை செய்பவர்கள் முதலில் கிழக்கு முகமாக நின்று சூரிய நமஸ்காரம் செய்து கொண்டு பதினோரு முறை ஓம்காரத்தை உச்சரிக்க வேண்டும். காயத்ரி மந்திர உபதேசம் உள்ளவர்கள் அங்கநியாசம், கரநியாசம், ஆசமனம் மற்றும் பிராணாயாமத்துடன் காயத்ரி மந்திரத்தை பத்து முதல் நூற்றியெட்டு முறை ஜெபம் செய்து கொள்ளலாம்.*

*வடமொழியில் உள்ள மந்திரங்களை தகுந்த உச்சரிப்புடன் சொல்லும் போது அளப்பரிய ஆற்றல் உண்டாகும். ஆனால் அதற்கான பயிற்சியின்றி உச்சரிப்பு பிழையேற்படுமேயானால் பலனில்லை. தமிழ் மட்டுமே அறிந்தவர்களும் பின்பற்றக்கூடிய வகையில் எளிய தமிழ்ப் போற்றிகளை இங்கு வழங்குகிறோம். இவை வடமொழியில் உள்ள மந்திரங்களின் நேரடி மொழி பெயர்ப்புகள் ஆகும். எனவே எளிதில் சொல்லவும் வழி வகை உண்டு. எண்ணம், சொல், செயல் மூன்றும் ஒன்றிணைந்து இவற்றை உச்சரித்தால் அம்பிகையின் அருள் நிச்சயம் கிட்டும்.*

**விநாயகர் வழிபாடு :**

*ஐந்து கரத்தனை யானை முகத்தனை*
*இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை*
*நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்*
*புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே.*

**குரு வழிபாடு :**

*தெளிவு குருவின் திருமேனி காண்டல்*
*தெளிவு குருவின் திருநாமம் செப்பல்*
*தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்*
*தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.*

**ஸ்ரீ சக்கரத்தில் ஸ்ரீ லலிதாம்பிகை ஆவாகனம்:**

*குறிப்பிட்ட மலர்களை இருகரங்களில் ஏந்தி, பின்வரும் அந்தாதியைப்பாடி சிரசிற்கு மேலே கரங்களைக் குவத்து அம்பிகையை சிவசக்தி ஐக்கிய ரூபிணியாக தியானித்து மலர்களை ஸ்ரீசக்கரத்தில் சேர்த்தவும் வேண்டும்.*

*வெளிநின்ற திருமேனியை*
*பார்த்தென் விழியும் நெஞ்சும்*
*களிநின்ற வெள்ளம் கரைகண்ட*
*தில்லை கருத்தினுள்ளே*
*தெளி நின்ற ஞானம் திகழ்கின்ற*
*தென்ன திருவுளமோ*
*ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும்*
*மேவி உறைபவளே !*

**மலர் அர்ச்சனை :**

*குங்குமத்தாலோ, குறிப்பிட்ட மலர்களாலோ இனிவரும் அர்ச்சனைகளைச் செய்யலாம் :*

**முதலாவது ஆவரணம் / நான்கு சதுர ரேகைகளும் மூன்று வட்டங்களும்/ த்ரைலோக்ய மோகனச் சக்கரம் :**

1. ஓம் அணிமா சித்தியே போற்றி
2. ஓம் லகிமா சித்தியே போற்றி
3. ஓம் மஹிமா சித்தியே போற்றி
4. ஓம் ஈசித்வ சித்தியே போற்றி
5. ஓம் வசித்வசித்தியே போற்றி
6. ஓம் ப்ரகாம்ய சித்தியே போற்றி
7. ஓம் புத்தி சித்தியே போற்றி
8. ஓம் இச்சா சித்தியே போற்றி
9. ஓம் பராப்தி சித்தியே போற்றி
10. ஓம் சர்வகாம சித்தியே போற்றி
11. ஓம் ப்ராஹ்மியே போற்றி
12. ஓம் மாஹேஸ்வரியே போற்றி
13. ஓம் கௌமாரியே போற்றி
14. ஓம் வைஷ்ணவியே போற்றி
15. ஓம் வாராஹியே போற்றி
16. ஓம் மாஹேந்திரியே போற்றி
17. ஓம் சாமுண்டா போற்றி
18. ஓம் மகாலட்சுமியே போற்றி
19. ஓம் சர்வ சம்ஷோபிணி முத்ரா சக்தியே போற்றி
20. ஓம் சர்வ வித்ராவிணி முத்ரா சக்தியே போற்றி
21. ஓம் சர்வாகர்ஷிணி முத்ரா சக்தியே போற்றி
22. ஓம் சர்வ வசங்கரீ முத்ரா சக்தியே போற்றி
23. ஓம் சர்வோன்மாதினி முத்ரா சக்தியே போற்றி
24. ஓம் சர்வ மகாங்குசா முத்ரா சக்தியே போற்றி
25. ஓம் சர்வ கேசரீமுத்ரா சக்தியே போற்றி
26. ஓம் சர்வ யோநி முத்ரா சக்தியே போற்றி
27. ஓம் சர்வ திரிகண்டா முத்ரா சக்தியே போற்றி

மூன்று லோகங்களையும் மயக்கும் சக்தி வாய்ந்த த்ரைலோக்ய மோகனச் சக்கரத்தின் அதிதேவதையாகிய திரிபுரா தேவிக்கும், ப்ரகடயோகினி சக்திகளுக்கும், பரிவார தேவதைகளுக்கும் இந்த மலர் அர்ச்சனையை மகிழ்வோடு சமர்ப்பிக்கிறேன்.

**இரண்டாவது ஆவரணம் / சர்வாசா பரிபூரகச் சக்கரம் 16 இதழ் தாமரை :**

29. ஓம் காமாகர்ஷிணி நித்யகலா தேவியே போற்றி
30. ஓம் புத்யாகர்ஷிணி நித்யகலா தேவியே போற்றி
31. ஓம் அகங்காரகர்ஷிணி நித்யகலா தேவியே போற்றி
32. ஓம் சப்தாகர்ஷணி நித்யகலா தேவியே போற்றி
33. ஓம் ஸ்பரிசாகர்ஷிணி நித்யகலா தேவியே போற்றி
34. ஓம் ரூபாகர்ஷிணி நித்யகலா தேவியே போற்றி
35. ஓம் ரசாகர்ஷிணி நித்யகலா தேவியே போற்றி
36. ஓம் கந்தாகர்ஷிணி நித்யகலா தேவியே போற்றி
37. ஓம் சித்தாகர்ஷிணி நித்யகலா தேவியே போற்றி
38. ஓம் தைர்யாகர்ஷிணி நித்யகலா தேவியே போற்றி
39. ஓம் ஸ்ம்ருத்யாகர்ஷிணி நித்யகலா தேவியே போற்றி
40. ஓம் நாமாகர்ஷிணி நித்யகலா தேவியே போற்றி
41. ஓம் பீஜாகர்ஷிணி நித்யகலா தேவியே போற்றி
42. ஓம் ஆத்மாகர்ஷிணி நித்யகலா தேவியே போற்றி
43. ஓம் அம்ருதாகர்ஷிணி நித்யகலா தேவியே போற்றி
44. ஓம் சரீராகர்ஷிணி நித்யகலா தேவியே போற்றி

எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றி வைக்கும் சக்தி வாய்ந்த சர்வாசாபரிபூரச் சக்கரத்தின் அதிதேவதையாகிய திரிபுரேசிக்கும், குப்த யோகினிகளுக்கும், பரிகார தேவதைகளுக்கும் இந்த மலர் அர்ச்சனையை மகிழ்வோடு சமர்ப்பிக்கிறேன்.

**மூன்றாவது ஆவரணம் / சர்வசம்ஷோபண சக்கரம் எட்டு இதழ் தாமரை :**

45. ஓம் அனங்க குஸுமா தேவியே போற்றி
46. ஓம் அனங்க மேகலா தேவியே போற்றி
47. ஓம் அனங்க மதனா தேவியே போற்றி
48. ஓம் அனங்க மதனாதுரா தேவியே போற்றி
49. ஓம் அனங்க ரேகா தேவியே போற்றி
50. ஓம் அனங்க வேகினி தேவியே போற்றி
51. ஓம் அனங்க அங்குசா தேவியே போற்றி
52. ஓம் அனங்க மாலினி தேவியே போற்றி

அனைத்தையும் ஓய்வின்றி இயங்க வைக்கும் சர்வசம்ஷோபண சக்கரத்தின் அதிதேவதையாகிய திரிபுர சுந்தரி தேவிக்கும், குப்ததர யோகினி சக்திகளுக்கும், சகல பரிவார தேவதைகளுக்கும் மகிழ்வோடு இந்த மலர் அர்ச்சனையை சமர்ப்பிக்கிறேன்.

**நான்காவது ஆவரணம் / சர்வசௌபாக்யதாயகச் சக்கரம் : 14 கோணங்கள் :**

53. ஓம் சர்வ சம்க்ஷோபிணி சக்தியே போற்றி
54. ஓம் சர்வ வித்ராவிணி சக்தியே போற்றி
55. ஓம் சர்வாகர்ஷிணி சக்தியே போற்றி
55. ஓம் சர்வாஹ்லாதினி சக்தியே போற்றி
57. ஓம் சர்வ சம்மோஹினி சக்தியே போற்றி
58. ஓம் சர்வ ஸ்தம்பினி சக்தியே போற்றி
59. ஓம் சர்வ ஜ்ரும்பிணி சக்தியே போற்றி
60. ஓம் சர்வ வசங்கரி சக்தியே போற்றி
61. ஓம் சர்வ ரஞ்சனி சக்தியே போற்றி
62. ஓம் சர்வவோன்மாதினி சக்தியே போற்றி
63. ஓம் சர்வார்த்த சாதினி சக்தியே போற்றி
64. ஓம் சர்வ சம்பத்திபூரணி சக்தியே போற்றி
65. ஓம் சர்வ மந்திரமயி சக்தியே போற்றி
66. ஓம் சர்வ த்வந்த்வ சக்தியே போற்றி

எல்லாவிதமான சௌபாக்யங்களையும் நல்கும் சர்வ சௌபாக்யதாயகச் சக்கரத்தின் அதிதேவதையான திரிபுராவாசினிக்கும், சம்ப்ரதாய யோகினி சக்திகளுக்கும், பரிவார தேவதைகளுக்கும் இந்த மலர் அர்ச்சனையை மகிழ்வோடு சமர்ப்பிக்கிறேன்.

**ஐந்தாவது ஆவரணம் / சர்வார்த்த சாதகச் சக்கரம் : வெளிப்பத்து கோணங்கள் :**

67. ஓம் சர்வ சித்திப்ரதா தேவியே போற்றி
68. ஓம் சர்வ சம்பத்ப்ரதா தேவியே போற்றி
69. ஓம் சர்வ ப்ரியங்கரி தேவியே போற்றி
70. ஓம் சர்வ மங்களகாரிணி தேவியே போற்றி
71. ஓம் சர்வ காமப்ரதா தேவியே போற்றி
72. ஓம் சர்வ துக்கவிமோசனி தேவியே போற்றி
73. ஓம் சர்வ மிருத்யுப்ரசமனி தேவியே போற்றி
74. ஓம் சர்வ விக்ன நிவாரிணி தேவியே போற்றி
75. ஓம் சர்வாங்க சுந்தரி தேவியே போற்றி
76. ஓம் சர்வ சௌபாக்யதாயினி தேவியே போற்றி

அனைத்து காரியங்களையும் சாதகமாக நிறைவேற்றியருளும் சர்வார்த்த சாதகச் சக்கரத்தின் அதிதேவதையாகிய திரிபுரா ஸ்ரீ தேவிக்கும், குலோத்தீர்ண யோகினி சக்திகளுக்கும், பரிவார தேவதைகளுக்கும் இந்த மலர் அர்ச்சனையை மகிழ்வோடு சமர்ப்பிக்கிறேன்.

**ஆறாவது ஆவரணம் / சர்வ ரக்ஷாகர சக்கரம் : உள்பத்துக் கோணங்கள் :**

77. ஓம் சர்வக்ஞா தேவியே போற்றி
78. ஓம் சர்வ சக்தி தேவியே போற்றி
79. ஓம் சர்வ ஐஸ்வர்யப்ரதா தேவியே போற்றி
80. ஓம் சர்வ ஞானமயி தேவியே போற்றி
81. ஓம் சர்வ வ்யாதி நிவாரிணி தேவியே போற்றி
82. ஓம் சர்வாதார ஸ்வரூபா தேவியே போற்றி
83. ஓம் சர்வ பாபஹர தேவியே போற்றி
84. ஓம் சர்வானந்த மயீ தேவியே போற்றி
85. ஓம் சர்வ ரக்ஷா ஸ்வரூபிணி தேவியே போற்றி
86. ஓம் சர்வேப்சித பலப்ரதா தேவியே போற்றி

அனைத்து ஆபத்துக்களிலிருந்தும் காப்பாற்றும் சர்வரக்ஷாகரச் சக்கரத்தின் அதிதேவதையான திரிபுரா மாலினீ தேவிக்கும், நிகர்ப்ப யோகினி சக்திகளுக்கும், பரிவார தேவதைகளுக்கும் மகிழ்வோடு இந்த மலர் அர்ச்சனையை சமர்ப்பிக்கிறேன்.

**ஏழாவது ஆவரணம் / சர்வரோகஹரச் சக்கரம் : எட்டுக் கோணங்கள் :**

87. ஓம் வசினீ வாக்தேவியே போற்றி
88. ஓம் காமேஸ்வரி தேவியே போற்றி
89. ஓம் மோதினீ தேவியே போற்றி
90. ஓம் விமலா தேவியே போற்றி
91. ஓம் அருணா தேவியே போற்றி
92. ஓம் ஜயினீ தேவியே போற்றி
93. ஓம் சர்வேஸ்வரீ தேவியே போற்றி
94. ஓம் கௌலினீ தேவியே போற்றி

எல்லா நோய் நொடிகளையும் நீக்கியருளும் சர்வரோகஹரச் சக்கரத்தின் அதிதேவதையாகிய திரிபுர சித்தா தேவிக்கும், ரகஸ்ய யோகினி சக்திகளுக்கும், பரிவார தேவதைகளுக்கும் இந்த மலர் அர்ச்சனையை சமர்ப்பிக்கிறேன்.

**எட்டாவது ஆவரணம் / சர்வசித்திப்ரதச் சக்கரம் : முக்கோணம் :**

95. ஓம் பாண சக்தி தேவியே போற்றி
96. ஓம் தனுர் சக்தி தேவியே போற்றி
97. ஓம் பாச சக்தி தேவியே போற்றி
98. ஓம் அங்குச சக்தி தேவியே போற்றி

எல்லா சக்திகளும் கைவரப் பெறச் செய்யும் சர்வ சித்திப்ரத சக்கரத்தின் அதிதேவதையாகிய திரபுராம்பா தேவிக்கும், அதிரகஸ்ய யோகனி சக்திகளுக்கும், பரிவார தேவதைகளுக்கும் இந்த மலர் அர்ச்சனையை மகிழ்வோடு சமர்ப்பிக்கிறேன்.

**ஒன்பதாவது ஆவரணம் / சர்வானந்த மயச்சக்கரம் : பிந்து மையம் :**

99. ஓம் திரிபுரா தேவியே போற்றி
100. ஓம் திரிபுரேசி தேவியே போற்றி
101. ஓம் திரிபுர சுந்தரி தேவியே போற்றி
102. ஓம் திரிபுரா வாசினி தேவியே போற்றி
103. ஓம் திரிபுரா ஸ்ரீ தேவியே போற்றி
104. ஓம் திரிபுரா மாலினி தேவியே போற்றி
105. ஓம் திரிபுரா சித்தா தேவியே போற்றி
106. ஓம் திரிபுராம்பிகா தேவியே போற்றி
107. ஓம் ஸ்ரீ மகா திரிபுர சுந்தரி தேவியே போற்றி
108. ஓம் ஸ்ரீ லலிதாம்பிகையே போற்றி

*உலக வாழ்வின் துன்பங்களையெல்லாம் நீக்கி பேரன்பு, பேரறிவு, பேராற்றல் யாவும் தந்து ஞான ஒளியில் என் ஆன்மாவைப் பிரகாசிக்கச் செய்யும் ஸ்ரீ மகா திரிபுரசுந்தரி தேவியாகிய, சிவசக்தி இணைந்த வடிவாகிய லலிதாம்பிகை அன்னையின் திருவடிகளுக்கும், பராபராதி ரகஸ்ய யோகினி சக்திகளுக்கும், பரிவார தேவதைகளுக்கும் மகிழ்வுடன் இந்த அர்ச்சனையை சமர்ப்பிக்கிறேன்.*

*தூபம், தீபம் காட்டி நைவேத்யம் படைத்து கற்பூர ஆரத்தியுடன் பூஜையை நிறைவு செய்யலாம்.*

*ஸ்ரீ சக்கர பூஜை செய்யும் சுமங்கலிகள் மற்ற பெண்களுக்கு மஞ்சள், குங்குமம், வெற்றிலை, பாக்கு, பழம், பூச்சரம், மஞ்சள் கயிறு, வளையல், இரவிக்கை துணி ஆகிய மங்கலப் பொருட்களை வழங்கி அவர்களின் நல்வாழ்த்துக்களைப் பெற்றுக் கொள்வது அவசியம். கணவன், மனைவி, குழந்தைகளுடன் கூட்டாக இவ்வழிபாட்டினைச் செய்வது மிகவும் நல்லது.*

*ஸ்ரீ சக்கரம் உலக சமாதானம் மற்றும் ஒற்றுமையின் சின்னம் ஆகும். எனவே அகில உலகமும் அமைதியுடனும், ஒற்றுமையுடனும், எல்லாநலன்களுடனும் வாழ வேண்டும் என்ற பொது நலப் பிரார்த்தனையையும் செய்வது சிறப்பு.*